DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | C. C No. 43/2025 |
| Deposition of witness | : | P.W – 6 |
| Name | : | அர்ச்சனா |
| Father's /Husband Name | : | மெகபூப்பாட்சா |
| Village | : | வலங்கைமான் |
| Taluk | : | வலங்கைமான் |
| Age | : | 40 |
| Occupation | : | மருத்துவர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 19th day of March, 2025.
Accused present.

**முதல் விசாரணை:–**

நான் தற்போது வலங்கைமான் அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 08.01.2025–ம் தேதி காலை 09.40 மணியளவல் நான் நன்னிலம்அரசு மருத்துவமனையில் பணியில் இருந்த போது கண்ணன் என்பவரை அவரது மனைவி செந்தமிழ்செல்வி என்பவர் என்னிடம் சிகிச்சைக்காக அழைத்து வந்தார். அவ்வாறு அழைத்து வந்த போது கண்ணன் சுயநினைவுடன் காணப்பட்டார். அவர் தன்னை 08.01.2025–ம் தேதி காலை 07.30 மணியளவில் தெரிந்த இரண்டு நபர்கள் அவரது வீட்டு அருகே வைத்து மூங்கில் கட்டையால் தாக்கியதாக கூறினார். அவரை பரிசோதித்த போது அவருக்கு பின்வரும் காயங்கள் காணப்பட்டது. 1) அவரது முன்னந்தலையில் வலது பக்கம் 6 x 4 x 2 செ.மீ அளவிலான கிழிந்த காயமும், 2) வலது கை சுண்டுவிரலில் ஒரு காயம் ஏற்பட்டு உள் சதைகள் வெளியே தெரிந்து வீக்கத்துடன் காணப்பட்டது. 3) வலது கையில் வீக்கம் காணப்பட்டு அசைவதற்கு சிரமத்துடன் வீக்கம் இருந்தது. 4) வலது கால் முட்டியிலும் வீக்கம் காணப்பட்டது. அவருக்கு வலது தலையில் ஏற்பட்டிருந்த காயத்திற்கு தையல்கள் போடப்பட்டு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு அவரது மேல்சிகிச்சைக்காகவும் எலும்பு முறிவு மருத்துவரின் கருத்துரை பெற வேண்டியும் திருவாரூர்அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரை செய்தேன். மேற்படி காயமடைந்த கண்ணன் என்பவருக்கு நான் பதிவு செய்த விபத்து பதிவேடு **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

ஒரு நபர் உயரமான இடத்திலிருந்து கீழே விழுந்தால் மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

(ஓம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.